BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# பிராம்ப்டனில் வேலை வாய்ப்பு உருவாக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உந்துதல் கொடுப்பதற்காக பிராம்ப்டனில் உட்பொதிந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொண்டுவந்து பிராந்தியத்தின் சேவைகளில் ஏற்படும் தடைகளுக்கு தீர்வு காணுதல்

பிராம்ப்டன், ON (ஜூன் 7, 2023) –. பீல் பிராந்தியத்தின் கலைப்பினை உறுதி செய்வதற்காக மாகாண ரீதியாக நியமிக்கப்பட்ட இடைநிலை வாரியம் இதனைப் பரிசீலனை செய்வதற்கான அவசரத் தேவையை நகரம் வலியுறுத்துகிறது; இதன் காரணமாக பிராம்ப்டனின் வளர்ச்சிக்கு இடையூறு உண்டாக்குவதோ அல்லது பிராம்ப்டன் குடியிருப்பாளர்கள் மீது கூடுதல் நிதி அழுத்தத்தை ஏற்படுத்தவோ செய்யாது என்பதுவும் வலியுறுத்தப்படுகிறது.

நேற்று, பிராந்திய சேவைக் கட்டுப்பாடுகள் காரணமாக தற்போது தாமதமாகிக் கொண்டிருக்கின்ற, அங்கீகரிக்கப்பட்ட வீட்டுவசதி விண்ணப்பங்களின் ஏழு குறிப்பிட்ட உதாரணங்களை நகரம் அறிவித்தது. இந்த திட்டங்கள் மட்டும் மொத்தமாக 9,368 வீட்டுவசதிகளை உருவாக்கும், ஒன்ட்டாரியோ மாகாணத்தால் நமது நகருக்காக நிர்ணயம் செய்யப்பட்ட வருடாந்திர இலக்குகளில் இது 83% ஆகும்:

- ***263 க்வீன் ஸ்ட்ரீட் கிழக்கு (Queen St. East):*** 2,810 அலகுகளைக் கொண்டபடி 29-46 எண்ணிக்கைக்கு இடைப்பட்ட எண்ணிக்கையிலான தளங்களைக் கொண்டபடி ஆறு உயர் அடுக்கு மாடிக் கட்டிடங்கள். தாமதத்திற்கான காரணம்: சுகாதாரமான கழிவுநீர் வடிகால் வசதி இல்லை.
- ***241 க்வீன் ஸ்ட்ரீட் கிழக்கு (Queen St. East):*** 1,586 அலகுகளைக் கொண்டபடி 35 தளங்கள் கொண்ட குடியிருப்புக்கான நான்கு உயர் அடுக்குமாடி கட்டிடங்கள். தாமதத்திற்கான காரணம்: சுகாதாரமான கழிவுநீர் வடிகால் வசதி இல்லை.
- ***1685 & 1710 க்வீன் ஸ்ட்ரீட் கிழக்கு (Queen St. East):*** 5-தளங்கள் கொண்ட போடியம் (podium) உடன் இணைக்கப்பட்ட 704 குடியிருப்பு அலகுகளைக் கொண்ட இரண்டு உயர் அடுக்குமாடி கட்டிடங்கள். தாமதத்திற்கான காரணம்: சுகாதாரமான கழிவுநீர் வடிகால் வசதிக்கான மண்டலம் பிரிப்பதில் இழுவை.
- ***227 வோட்டன் ஸ்ட்ரீட் (Vodden Street):*** 2,551 அலகுகளைக் கொண்டபடி சென்ட்டென்னியல் வணிக (Centennial Mall) வளாகத்தை மறு

உருவாக்கம்செய்வதற்கான மாஸ்டர் ப்ளான். தாமதத்திற்கான காரணம்: சுகாதாரமான கழிவுநீர் வடிகால் வசதி இல்லை.

- ***249 க்வீன் ஸ்ட்ரீட் கிழக்கு (Queen St. East):*** 435 அலகுகளைக் கொண்டபடி 38-தளங்களைக் கொண்ட உயர்அடுக்குமாடிக் குடியிருப்பு. தாமதத்திற்கான காரணம்: சுகாதாரமான கழிவுநீர் வடிகால் வசதி இல்லை.
- ***253 க்வீன் ஸ்ட்ரீட் கிழக்கு (Queen St. East):*** : 652 குடியிருப்பு அலகுகளைக் கொண்டபடி (33 மற்றும் 38- தளங்களைக் கொண்ட) இரண்டு உயர்அடுக்குமாடிக் கட்டிடங்கள். தாமத்திற்கான காரணம்: சுகாதாரமான கழிவுநீர் வடிகால் வசதி இல்லை.
- ***137 ஸ்டீல்ஸ் அவென்யூ மேற்கு (Steeles Avenue West)***: 630 அடுக்குமாடிக் குடியிருப்பு அலகுகளை உருவாக்குவதில் சுகாதாரமான கழிவுநீர் வடிகால் மற்றும் தண்ணீர் வினியோக சேவை வழங்குவதில் கொள்திறன் குறைபாடுகள் காரணமாக முதலாவது கட்டம் மட்டுமே முன்னேற்றம் காண்கிறது.

இந்த விண்ணப்பங்களின் முன்னேற்றத்தில் ஏற்பட்ட தாமதமானது, பிராந்திய சேவைக் கட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டிய அவசரத் தேவையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என்பதுடன் செழித்து வளரும் வீட்டு வசதி சந்தை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதியளிக்கிறது.

ஜனவரியில், பீல் பிராந்தியமானது 2023 மற்றும் 2032 க்கு இடைப்பட்ட காலதிற்கான பீல் மாகாண வீட்டு வசதி இலக்குகளை அடைவதற்கு மூலதனச் செலவினங்களில் 20.4 பில்லியன் டாலர்கள் தேவைப்படும் என்று முன்னறிவிப்புகளுடன் பிராந்திய கவுன்சிலிடம் விண்ணப்பம் வழங்கியது. இந்தக் குறிப்பிட்ட முதலீடானது சொத்துக்களை கையகப்படுத்தல் மற்றும் சிறு செலவுகளை உள்ளடக்குவதில்லை; பிராந்தியத்தின் திட்டமிடப்பட்ட 10 ஆண்டு மூலதன வரவுசெலவுத்திட்டத்தைக் காட்டிலும் இருமடங்கு அதிகமாகிறது.

சமீபத்திய 2021 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு தரவுகளின்படி பீல் பிராந்தியத்தில் நிகர மக்கள்தொகை வளர்ச்சியில் 90% பிராம்ப்டனில் நிகழ்ந்துள்ளது; குடியேற்றத்திற்கான இலக்கு இந்த நகரம்தான் என்பதையும், இந்த அளவிலான வளர்ச்சியை ஆதரிக்க போதுமான உள்கட்டமைப்பு தேவை என்பதையும் தெளிவுபடுத்துகிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக வருடத்திற்கு 8,000 புதிய குடியிருப்பு கட்டிட விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளித்து, சராசரியாக 5,000 அனுமதிகளை இரண்டு யூனிட் குடியிருப்புகளுக்கு

வழங்கியிருந்தாலுமே கூட, பிராம்ப்டனின் திறனை முழுமையாக வெளிக்கொணரும் திறனைத் தடுக்கும் பிராந்திய சேவைக் கட்டுப்பாடுகள் காரணமாக, நகரம் தொடர்ந்து சவால்களை எதிர்கொள்கிறது.

மே 18, 2023 அன்று, மாகாண நிர்வாகமானது Bill 112, *The Hazel McCallion Act என்னும் மசோதாவை அறிமுகம் செய்தது.* ஜூன் 7, 2023 நிலவரப்படி, ஒன்ட்டாரியோ சட்டமன்றத்தில் இந்த மசோதா தற்போது மூன்றாம் முறையாக பரிசீலிப்பில் உள்ளது. இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால், ஜனவரி 1, 2025 முதல் பீல் பிராந்திய முனிசிபாலிட்டியைக் கலைத்து, பிராம்ப்டன், கலீடான் மற்றும் மிஸ்ஸிஸ்ஸாகா ஆகியவை ஒற்றை அடுக்கு நகராட்சிகளாக மாற்றும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“வரவிருக்கும் 10 ஆண்டுகளில் வீட்டுவசதி இலக்குகளை நகராட்சிகள் அடைவதற்கான செலவு $20.4B என இந்த ஆண்டின் தொடக்கத்தில் பிராந்திய நிர்வாகம் உறுதிப்படுத்தியது. பிராம்ப்டன் வரலாற்று ரீதியாகவே அதன் அண்டைப்புற உள்கட்டமைப்பில் அதிக அளவில் முதலீடு செய்துள்ளது, மேலும் நமது எல்லைகளுக்குள் தென்படும் வளர்ச்சியைக் காணும் போது, திரும்பக்கிடைக்கும் அந்த ஆதரவையே இப்போது நம்பியிருக்கிறது. பிராந்திய சேவைக் கட்டுப்பாடுகள்தான் முக்கியமான வீட்டுத் திட்டங்களை நிறுத்தி வைக்கின்றன, ஒன்ட்டாரியோவின் வீட்டு வசதி இலக்குகளை அடைவதற்கான நமது இயல்தன்மையைத் தடுக்கின்றன மற்றும் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கின்றன. பிராம்ப்டன் வளர்ச்சி பாதையில் இருப்பதை உறுதிசெய்ய இந்த தடைகளை நாம் நிவர்த்தி செய்வது கட்டாயமாகும்."

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், பிராம்டன் நகரம்*

“பிராந்தியத்தின் மக்கள்தொகை வளர்ச்சியில் 90% பிராம்ப்டனிலிருந்து வருகிறது மற்றும் தொடர்ச்சியான வளர்ச்சியை எதிர்பார்க்கிறது என்பதால், குடியிருப்புத் திட்டங்களை முன்னோக்கி நகர்த்துவதற்கு, சேவை செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. மக்கள் வாழ, வேலை செய்ய மற்றும் செழிப்பாக வாழக்கூடிய துடிப்பான மற்றும் வளமான சமூகத்தை உருவாக்குவதே எங்கள் முன்னுரிமை கொண்ட விஷயமாகும். பீல் பிராந்தியத்தின் சேவைக் கட்டுப்பாடுகள் காரணமாக பல திட்டங்கள் தாமதமாகின்றன; மற்றும் எங்கள் மாகாணத்திற்கான வீட்டுவசதி இலக்குகளை அடைவதற்கும், தொழில்துறை வளர்ச்சிகள் மூலம் பிராம்ப்டனுக்குள் நல்ல ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்புகளை குடியிருப்பாளர்களுக்கு வழங்குவதற்கும், நாம் முக்கியமான இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்."

- *மைக்கேல் பல்லேய்ஸ்சி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 2 & 6; தலைவர், திட்டமிடல் மற்றும் வளர்ச்சித்துறை, பிராம்ப்டன் நகரம்,*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 90,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்..

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca